பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்

★ விலை ரூபா 1-25

# ஈழநாடு
THE EELANADU.
NATIONAL TAMIL DAILY.

மலர் 26 பங்குனி 7 ஜ. ஆதி 16 இதழ் 38

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 20-3-84

## கச்சதீவு உற்சவம் எளிமையாக நடந்தது

(வேலணை நிருபர்)
(இ. சற்குருநாதன்)

கச்சதீவு புனித அந்தோனியார் ஆலயத்தில் வருடாந்த உற்சவம் சடந்த 11-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை எளிமையான முறையில் கொண்டாடப்பட்டது.

ஆலயத்தின் மூப்பர் ஞா. அந்தோனிப்பிள்ளை தலைமையில் அவரது சகோதரர் ஞா. லியோ மற்றும் நெடுந்தீவுப் பகுதியின் பங்குத்தந்தை உட்பட பாடகர் குழுவினர் முதல்நாளான 10ம் திகதி சனிக்கிழமை காலை நெடுந்தீவில் இருந்து கச்சதீவிற்குப் புறப்பட்டுச் சென்று ஆலயத்தையும் சுற்றுடல்களையும் சுத்தம் செய்தனர்.

(8-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைத் தமிழர் பற்றிய சர்வகட்சி மகாநாடு

# சத்வாலுக்கு அவசர அழைப்பு!

# உயர்மட்ட ஆலோசனை நடந்தது

### நமது வெளிநாட்டுச் செய்திச் சேவை

**இலங்கைத் தமிழர் பிரச்னை சம்மந்தமான சர்வகட்சி மாநாட்டின் 'முன்னேற்றம்' குறித்து, இந்தியா கவலைகொண்டுள்ளதா?**

இலங்கையில் உள்ள இந்தியத் தூதர் திரு. எஸ். ஜே. சத்வால் அவசரமாக அழைக்கப்பட்டு, புதுடில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மந்திராலோசனையைத் தொடர்ந்தே மேற்படி சந்தேகம் அரசியல் வட்டாரங்களில் தலைதூக்கியுள்ளது.

இலங்கைத்தூதர் திரு. எஸ். ஜே. சத்வால் கடந்த புதன் கிழமை தமிழர் விடுதலைக்கூட்டணிச்செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கத்தையும் வியாழக்கிழமை அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் உப தலைவர் திரு. மோதிலால் நேருவையும் சந்தித்திருந்தார்.

தென்கிழக்கு ஆசிய இந்தியத் தூதர்களின் மாநாடு புதுடில்லியில் அடுத்த வாரம் நடைபெறவிருக்கும் நேரத்தில் இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு. சத்வால் நேற்று முன்தினம் அவசரமாக இந்திய

(8-ம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் விவசாயபீடம்

### 60 ஏக்கரில் அமைக்க ஏற்பாடு

[கிளிநொச்சி]

யாழ். பல்கலைக்கழகத்தின் விவசாயபீடம் கிளிநொச்சியில் அமைவது இப்பொழுது உறுதியாகி விட்டது.

(8-ம் பக்கம் பார்க்க)

## வயலில் புதையுண்ட கவச வண்டி!

[பண்டத்தரிப்பு]

மாதகல் சம்பில்துறை கடற்கரைப்பகுதியில் சட்ட விரோத கடத்தலில் ஈடுபடுவோரைக் கண்டுபிடிக்கும் வேட்டையில் ஈடுபடச் சென்ற இராணுவ கவசவண்டியொன்று வயல் சேற்றில் நேற்று அதிகாலை புதையுண்டது!

பலாலி இராணுவ முகாமிலிருந்து பாரம் தூக்கி சாதனங்கள் கொண்டுவரப்பட்டு அதன் மூலம் மிகவும் சிரமப்பட்டு அந்த கவசவண்டி வெளியே எடுக்கப்பட்டது.

இதன் காரணமாக அவ்வீதி வழியாக வழமையாகச் செல்லும் மீனவர்கள் அச்சமடைந்து குறுக்குவழியாக வீடுதிரும்பினார்கள்.

## மக்கள்வங்கிக் கொள்ளை மற்றுமொருவர் கைது

(கொழும்பு)

அநுராதபுரம் மாவட்டத்திலுள்ள ஹெப்பிட்டிபொல மக்கள் வங்கியில் இடம் பெற்ற பல லட்ச ரூபா கொள்ளை தொடர்பாக மேலும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நித்தம்புவ என்னுமிடத்தைச் சேர்ந்த இந்நபரை நேற்றுப் பொலிசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இக்கொள்ளை தொடர்பாக ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர். (கு)

★ வானில் அபூர்வ நிகழ்வுகள்

## மூன்று கிரகங்கள் அடுத்தடுத்து கிரகணம்!

(யாழ்ப்பாணம்)

"சந்திரனால் சூரியன் மறைக்கப்படும்பொழுது சூரிய கிரகணம் ஏற்படுகிறது. அதே போல் சந்திரன் கிரகங்களையும் மறைப்பதுண்டு. இது அபூர்வமாகவே நிகழும். இன்று சனியும், நாளை செவ்வாயும், நாளை மறுதினம் இந்திரனும்

(8ம் பக்கம் பார்க்க)

## இறக்குமதி உணவுப்பொருள் விலையில் பெரும் வீழ்ச்சி?

[கொழும்பு]

இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருட்களின் விலையில் பெருமளவு வீழ்ச்சி ஏற்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இறக்குமதி செய்யப்படும் உணவுப்பொருட்களின் சுங்கத் தீர்வை, வியாபார மொத்த

(8ம் பக்கம் பார்க்க)

## காட்டு யானைக் கூட்டம் வட்டக்கச்சி நோக்கி படையெடுப்பு!

### பாடசாலை மாணவர் ஐவர் படுகாயம்!!

[கிளிநொச்சி நிருபர் (கே. வி. சி. திருவேங்கடமூர்த்தி)]

முருகண்டி, பாரதிபுரம் ஆகிய பகுதிகளில் வெறியாட்டத்தை நடத்தி, பத்துக்கும் அதிகமானோரை பலிகொண்டு நூற்றுக்கணக்கான வீடுகளை நாசம் செய்து பலரைப் படுகாயப்படுத்தி பெரும் அனர்த்தங்களை விளைவித்த காட்டுயானைக் கூட்டம் இப்போது வட்டக்கச்சியை நோக்கி 'படை' எடுத்துதனது வெறியாட்டத்தை நடத்தி வருகிறது.

ஒரேநாளில் வட்டக்கச்சியில் பாடசாலை மாணவர்கள் உட்பட ஐந்து பேரைத்தாக்கி படுகாயம் விளைவித்துள்ளது இந்த யானைகள். என். நடராசா (40 வயது) ரி. ரங்கநாதன் (24 வயது) அன்ரன் லூயிஸ் [15 வயது பாடசாலைமாணவன்] ஆகியோர் மிகவும் அபாயகரமான நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சி. புஸ்பாகரன் [18 வயது] வே. சண்முகலிங்கம் [38 வயது] ஆகியோர் படுகாயம் அடைந்து கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த ஐந்து பேரையும் ஒரே நாளில் யானை தாக்கி உள்ளது.

காலையில், வட்டக்கச்சியில் மக்கள் நிறைந்துவாழும் ஹம்சன் வீதிக்கு யானை ஒன்று வந்து இருவரை கோரமாகத் தாக்கியதைத் தொடர்ந்து பொதுமக்கள் திரண்டு, நூற்றுக்கணக்கான சத்தவெடிகளைப் போட்டு குறித்த யானையை பற்றைக் காட்டொன்றுக்கு துரத்தினார்கள். இதை அறிந்து மேலும் பாடசாலை மாணவர்களும், பொதுமக்களும் பற்றைக் காட்டிற்கு யானை பார்க்க திரண்டனர். அப்போது வெறிகொண்ட யானை, அன்ரன் லூயிஸையும், புஸ்பாகரனையும் தாக்கிப் படுகாயப்படுத்தியது. இதைக்கண்ட மக்கள் நாலாபுறமும் சிதறி ஓடினார்கள்.

அன்று இரவு வயலில் காவல் இருந்த சண்முகலிங்கத்தை

(8-ம் பக்கம் பார்க்க)

## கப்பல்துறை

### வேலை வெற்றிடங்கள்

எங்கள் நிறுவனத்தில் கீழ் கண்ட பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கப்பல் தள அதிகாரிகள் பயிலுனர்கள்**

(Deck Cadets) (for Middle Trade)

கல்வித் தகைமைகள்: G. C. E. O/L

வயது: 16 - 24

பயிற்சி காலத்தில் சராசரி மாத அலவன்சாக (Allowance) ரூபா 1000/- வழங்கப்படும்.

சித்திபெற்ற அதிகாரிகளுக்கு மாதச் சம்பளமாக ரூபா 6000/- வழங்கப்படும்.

குறிப்பிட்ட வெற்றிடங்களே உள்ளன.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

Fleet Personnel Officer

**Selco Marine Ltd.**

104/1 ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

1414

## சிறு விளம்பரம்

### காணவில்லை

ஏழாலை மத்தியைப் பிறப்பிடமாகக் கொண்ட தம்பிமுத்து இரத்தினம், இரத்தினம் தயானந்தம் ஆகியோரின் அடையாள அட்டைகள் யாழ். செயலகத்தில் தவறுதலாக விழுந்துவிட்டது கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்தால் சன்மானம் வழங்கப்படும். தம்பிமுத்து இரத்தினம், ஏழாலை மத்தி, சுன்னாகம். [1470]

### பயிற்சி

ரெலிவிசன், வீடியோ டெக் திருத்த பயிற்சி, வைரிங், வெல்டிங், Hotel Management செய்முறைப்பயிற்சிகளுடன் நடைபெறும் ஆரம்பம்: 25-03-84. Jaffna Institute Technical, 52/1 [...] கட்டடம், (றெயில்வே கடவைக்கருகாமை) ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [1458]

### தேவை

மன்னாரில் புதிதாக திறக்கப்படவிருக்கும் சோடா (Aerated water) தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள எல்லாத்தில தொழிலாளர்கள் தேவை. மனுச் செய்க. பரராசசேகரம், 108 பிரதானவீதி, மன்னார். [1402]

புதிதாக திறக்கப்பட்ட கடைக்கு நேர்மையும் திறமையும் உள்ள ஒரு ஆள் தேவை. உடனே நற்சாட்சிப்பத்திரத்துடன் நேரில் வரவும். றஜீவன் ரேட் சென்ரர், 87, ஆஸ்பத்திரி வீதி, (பழைய மார்க்கற்) யாழ்ப்பாணம். (1464)

### விற்பனைக்கு

சிங்கர் குளிர்சாதனப்பெட்டி 6-5 அடி 2 வருடம் பாவித்த நல்ல நிலையிலுள்ளது. பார்வையிடும் இடம் 'சுந்தர கிரி' அச்சுக்கூட ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில். (1471)

கிளிநொச்சி பஸ்நிலையத்திற்கு அண்மையில் கண்டி றோட்டில் 22 பரப்பு காணி விற்பனைக்குள்ளது. வியாபார நிலையங்களுக்கோ - தொழிற்சாலைகளுக்கோ உகந்த இடம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 1475, மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். [1475]

மீசாலை பிரதானவீதியிலிருந்து செல்லும் அல்லாரை றோட்டில் வீடு, தொழிற்சாலை கட்டுவதற்கு ஏற்ற 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு உடன்தொடர்புகொள்ளவும்: சிவசம்பு பாலச்சந்திரன், அம்மன் வீதி, மீசாலை. [1466]

மிருசுவில் கண்டிவீதி 188ம் கட்டையில் ஐந்து ஏக்கர் (ஆலடித் தோட்டம்) காணியும் வெள்ளக் குடியேற்றத் திட்டத்திற்கு அண்மையில் 20 ஏக்கர் (பெரிய தம்பித் தோட்டம்) சிறிய வீடு கிணற்றுடன் கூடிய காணியும் பதினைந்து ஏக்கர் (சின்னதம்பித் தோட்டம்) காணியும் (இவையாவும் தென்னை, பனை, மாமரங்களுடன் உண்டு) உசனில் இரண்டு அறைகொண்ட வீட்டுடன் மூன்று பரப்பு காணியும்- மீசாலை வடக்கு கொடிகாமம் றெயில்நிலையத்திற்கு அண்மையில் 77 பரப்பு தோட்டமும் (சக்கடத்தார் தோட்டம்)- கடற்கரை பருத்தித்துறை வெளிச்சவீட்டிற்கு முன்னால் 1 1/2 ஏக்கர் தென்னை, பனை கொண்ட காணியும் (பிரித்தும் கொடுக்கப்படும்) விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்; அருளம்பலம், மே/பா.E.S. நடராஜா, 122B, நாவலர்வீதி, யாழ்ப்பாணம். (1472)

### தொழில் ஆலோசகர் சேவை

முன்னைநாள் சிரேஷ்ட உதவி தொழில் தொடர்பு ஆணையாளரிடம் தொழில் சட்டங்கள் [சேமலாபநிதி உட்பட] ஊழியர் நஷ்டஈடு மற்றும் தொழில்நியாய மன்றம் சம்பந்தப்பட்ட நிபுணத்துவ ஆலோசனைகளும் பெறவும் மன்றில் ஆஜராகி சட்டவாதம் செய்யவும் தொடர்பு கொள்க

எஸ். எப். பிலிப்பையா
B.Sc. (London) E XCA.S
9/2, மூளாய் லேன் off
குருசோ றோட்,
யாழ்ப்பாணம். [1473]

# முதலாம் வகுப்பிலிருந்தே இனி வகுப்புக்கள்!

(மானிப்பாய்)

சர்ச்சைக்குள்ளாகியுள்ள ஒன்றிணைப்புக் கல்வி (பாலர் வகுப்பு தொடக்கம் ஐந்தாம் வகுப்புவரை) பற்றிய கருத்தரங்கு ஒன்று யாழ். இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலை மண்டபத்தில் சென்ற 14ம் திகதி நடைபெற்றபோது பல புதிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளமுடிந்தது.

மானிப்பாய் வட்டாரத்தில் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலைகள் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டன.

இக்கருத்தரங்குக்கு தலைமை வகித்துப் பேசிய மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. ச. தவஞ்செயன் 1972ம் ஆண்டிலேயே இத்திட்டம் உருவாகியதென்றும் இத்திட்டத்தின் செயல்பாடுகளில் சில குறைபாடுகள் இருந்தபோதிலும் விரைவில் இவை செம்மை பெறும் எனத் தான் நம்புவதாகவும் தெரிவித்தார்.

பழைய திட்டங்களை நாம் ஒரேயடியாகக் குறைகூறிவிட முடியாது என்றும் காலமாற்றங்களுக்கும் நவீன தேவைகளுக்கு மேற்ப நல்ல புதிய திட்டங்களை செயல்படுத்த முற்படுவது எதிர்காலத்தில் நல்ல பலனை அளிக்கும் என்றும் குறிப்பிட்டார்.

அவர் தமது தலைமையுரையில் மேலும்: ஒன்றுக்கொன்று தொடர்வுபடுத்துவதால் மாணவர்களுக்கு பல விஷயங்களை தெளிவாக விளங்கிக்கொள்ளும் வாய்ப்பு ஏற்படுகின்றது என்றும், முன்னேற்றமடைந்த நாடுகளில் இத்திட்டம் நல்ல வெற்றியைக் கொடுத்துள்ளது என்றும் கூறினார்.

ஆசிரியர்கள் மனநிறைவுடன் செயல்படும்நிலை அங்குள்ளது என்றும் அவர் எடுத்துக் கூறினார்.

"ஒன்றிணைப்புக் கல்வியும் அதன் நோக்கமும்" எனும் தலைப்பில் உரைநிகழ்த்திய யாழ்ப்பாண மாவட்ட கல்வி அதிகாரி திரு. தியாகராசா உரைநிகழ்த்துகையில் பல புதிய தகவல்களை வெளியிட்டார். அடுத்த வருடம் முதல் அரசாங்க பாடசாலைகளில் பாலர் வகுப்பு இருக்காது என்பதும், மாணவன் ஒருவன் பாடசாலையைவிட்டு வெளியேறும்போது கையில் கூடவே மதிப்பீட்டுக் கோவை ஒன்றையும் இனி எடுத்துச்செல்லவேண்டியிருக்கும் என்றும் தெரிவித்தார்.

ஆரம்ப வகுப்புகளில் கல்வி கற்பிப்பதற்காக யாழ். மாவட்டத்தில் சுமார் 800 ஆசிரியர்கள் இன்னும் தேவைப்படுகின்றார்கள் என்பதும் அவர் தெரிவித்த தகவல்களில் ஒன்று.

திரு. தியாகராசா தனது உரையின்போது தற்போது மாணவர்களின் வாசிப்புத்திறன் வெகுவாகக் குறைந்து காணப்படுகின்றதென்றும் இப்போது மாணவர்கள் 6ம் வகுப்புகளில் கணிதம், மொழி ஆகிய பாடங்களில் மிகக்குறைவாக இருக்கின்றார்கள் என்றும் அவர் கணிப்பு தெரிவித்தார்.

அதிபர்கள் ஆசிரியர்கள் இது விஷயங்களில் சிறிது கூடிய அக்கறை காட்டவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

ஒன்றிணைப்புக் கல்வி பற்றி அவர் குறிப்பிடுகையில் ஒன்றிணைப்புக்கல்வி முறையைவிட சிறந்தது வேறெதுவுமில்லை என்ற முடிவுக்கு இப்போது கல்வித்துறையில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்கள் வந்துள்ளார்கள் என்றும் கூறினார்.

ஒன்றிணைப்புக் கல்வியில் உபகரணங்களின் அவசியம் பற்றியும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

"மாணவர் மதிப்பீட்டு படிவங்கள் தயாரித்தல் எனும் பொருளில் இணுவில் அ. மி. த. க. பாடசாலை அதிபர் திரு. செ. சோதிப்பெருமாள் பேசுகையில் மாணவர்கள் மத்தியில் மறைந்துள்ள திறமைகளை வெளிக்கொணர இந்த மதிப்பீடுகள் உதவும் எனக்குறிப்பிட்டார்.

மாணவனை எவ்வளவு தூரம் இன்னும் முன்னேற்றலாம் எனக் கணித்துக்கொள்ளவும் இவ்வித மதிப்பீடுகள் உதவும் எனவும் அவர் எடுத்துக் கூறினார்.

சங்குவேலி இந்து தமிழ் கலவன் பாடசாலை அதிபர் திரு. பொ. இரா நடராஜன், அதிபர்திரு. த நடராசா ஆகியோரும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு உரைநிகழ்த்தினர்.

## முதலாவது பிறந்த தின வாழ்த்து

## வசந்தன்



யாழ்ப்பாணம் 395, கே. கே. எஸ். றோட்டைச் சேர்ந்த வெங்கிடசாமி (ராஜ்) தம்பதிகளின் செல்லப் புதல்வன் வசந்தன் இன்று தனது முதலாவது பிறந்த தினத்தை தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகின்றார்

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அப்பப்பா, அம்மம்மா, தாத்தா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் சகல கலைகளையும் கற்று சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். 1463

முதலாம் வருட

## ஞாபகார்த்தம்

## திருமதி அன்னம்மா திருச்செல்வம்



நெடுந்தீவைச் சேர்ந்த காலஞ்சென்ற அம்பலவாணர் திருச்செல்வம் அவர்களின் மனைவி இவ்வுலக வாழ்வை நீத்த முதலாம் வருட ஞாபகமாக யாழ். ஆசனக் கோவிலில் பங்குனி 21-ம் நாள் காலை ஆறு மணிக்கு நடைபெறும் திருப்பலியில் பங்குபற்றுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவரைப் பிரிவிலும் மறவாத குடும்பத்தினர்
43, கொழும்புத்துறை றோட்,
சுண்டிக்குளி. 1469

## 31-ம் நாள் நினைவஞ்சலி



18-2-84இல் அகால மரணம் எய்திய

## செல்வி யமுனினி பரமானந்தம்

மலர்வு: 8-5-1959 உதிர்வு: 18-2-1984

நிலா வெண்ணிலா நீயிருந்து ஒளி தந்தாய்!
உலா வருகின்ற வேளையெல்லாம் குமிழ் சிரிப்புதிர்த்தாய்!
பலா நீ பழுத்திருக்க, பாதியிலே பறித்தவன் யாரம்மா!
விலா ஒடிந்தவர்போல் வேதனையில் தவிக்கின்றோம்!
நிலா! நீயில்லா இல்லம் நிலவில்லா வானம்தானே!

அன்புத்தாய், அக்கா, அத்தான், அண்ணா,
தம்பி, கண்ணன், ரேசன், ராசு,
மற்றும் உறவினர்களும், நண்பர்களும்.

"மிதிலை",
கருடாவில்,
தொண்டைமானாறு. 1468

## கடைகள் வாடகைக்கு

யாழ். மணிக்கூட்டு வீதியில் யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கத்திற்கும் பவர்ஸ் நிறுவனத்திற்கும் இடையில் 2000 சதுர அடியில் கடைகளுடன் கூடிய மாடிக் கட்டடம் ஒன்று அமைப்பதற்கு வரைபடங்கள் அனுமதிக்கப்பட்டுள்ளன. வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கேற்ற வசதிகளுடைய கட்டடம் 84-ம் ஆண்டு அக்டோபர் மாதமளவில் முடிவடையும். கடைகள் தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவும்.

ஜே. எம். சபாரெட்ணம்,
மெர்க்கன்டைல்
கிறெடிற் லிமிட்.,
11/8, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

1416

## மரண அறிவித்தல்

## பாவிலுப்பிள்ளை மேரிப்பிள்ளை

அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற பாவிலுப்பிள்ளையின் அன்பு மனைவி மேரிப்பிள்ளை காலமானார். இவர் ஏபிரகாம், காலஞ்சென்ற சின்னத்துரை, அமிர்தநாயகம் J. P. (முன்னாள் கவி), சுகிர்தமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி செபமாலை, திருமதி இராசமலர் ரோசம்மா, செல்லத்துரை ஆகியோரின் மாமியாருமாவார். அன்னாரின் பூதவுடல் இன்று 20-3-84 செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அச்சுவேலியிலுள்ள அவரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு திருப்பலிப் பூசையின் பின்னர் புனித அந்தோனியார் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

(1476) தகவல்: அ. அமிர்தராஜ்

# 2,000 ஈரானிய வீரர்கள் இரசாயன நச்சு வாயுக்களினால் தாக்கப்பட்டனர்

## வளைகுடாயுத்தத்தில் உக்கிரமானசண்டை

தெஹறான், மார்ச் 19

ஈராக் பயன்படுத்திய இரசாயன நச்சு வாயுக்களினால் சுமார் 2,000 ஈரானியப்போர்வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது

இத்தகவலை ஈராக் முழுமையாக மறுத்துள்ள போதிலும் இரசாயன ஆயுதங்களினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறுவதற்காக மேற்குஐரோப்பா, ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கும் ஈரானிய வீரர்களே ஆதாரமாக வைத்து இத்தகவல் உண்மையாக இருக்கலாம் என்று நம்பப்படுகிறது.

இதனிடையே ஈராக்-ஈரான் யுத்தம் மிக உக்கிரமான கட்டத்தை அடைந்துள்ளது.

பஸ்ராவுக்கு அருகேமதிஜேன் தீவுப்பகுதிகளில் ஈராக். ஜெட் விமானத் தாக்குதலை மேற்கொண்டுள்ளது இதனால் ஈரான் தரப்பில் பலத்தசேதம் ஏற்பட்டிருப்பதோடு ஆயிரம் பேர் வரையில் இறந்திருக்கலாமென்று ஈராக் அறிவித்துள்ளது.

தமது படைகள் ஈராக் மீது நேற்று மேற்கொண்ட பலத்த தாக்குதலில் ஈராக் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டிருப்பதாக ஈரானும் தெரிவித்துள்ளது.

42 மாதகால வளைகுடா யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்காக அரபுலீக் அமைப்பு சமாதான முயற்சிகளில் தொடர்ந்து இறங்கியுள்ளது

அரபுலீக் அமைப்பின் செயலாளர் இவ்விவகாரம் குறித்து பிரான்கிய வெளியுறவு அமைச்சருடன் பேச்சுவார்த்தையை நடத்தியுள்ளார். பிரான்ஸ் ஐ. நா. பாதுகாப்பு சபையில் வளைகுடாயுத்தம் தொடர்பாக நகல்தீர்மானமொன்றை விரைவில் கொண்டுவரவுள்ளது. (சூ)

### எகிப்திய படைகள் உஷார்

கெய்ரோ மார்ச், 19

சூடான் தலைநகர் கார்ட்டூனில் கடந்த வாரம் நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து எகிப்தியப் படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

இக்குண்டு வெடிப்பின் பின்னணியில் லிபியா சம்பந்தப்பட்டிருக்கலாம் என்று எகிப்து நம்புகின்றது.

லிபியா சூடானை தாக்கலாமென்று எகிப்து கருதுவதினாலேயே தனது நட்பு நாட்டுக்காக எகிப்து தனது படைகளை உஷார் நிலையில் வைத்திருக்கிறது

எகிப்து- சூடான் தமக்கிடையே பாதுகாப்பு ஒப்பந்தம் செய்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சூ)

### படப்பிடிப்பாளர் கொல்லப்பட்டார்

சல்சல்வடோர், மார்ச் 19

யுத்தக் காட்சிகளை அற்புதமாக படம்பிடிக்கும் உலகப் புகழ்பெற்ற படப்பிடிப்பாளர் ஒருவர் எல்சல்வடோரில் நடந்த சண்டையில் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜோன் ஹொக்லன்ட் என்ற இந்தப் படப்பிடிப்பாளர் எல்சல்வடோரின் தலைநகரிலிருந்து 40 மைல் தொலைவில் அரசாங்கப் படைகளுக்கும், இடதுசாரிகொரில்லாக்களுக்குமிடையில் நடந்த சண்டையை படமாக்கிக் கொண்டிருந்தபோது எதிர்பாராத விதமாக வந்த குண்டொன்றினால் தாக்கப்பட்டு மரணமானார்.

இச்சம்பவத்தில் இவரின் உதவியாளர் காயமடைந்தார்.

## பங்களாதேஷில் உள்ளூராட்சி தேர்தல் காலவரையறையின்றி ஒத்திவைப்பு!

டாக்கா, மார்ச். 19

பங்களாதேஷில் இந்தவாரம் நடைபெறவிருந்த உள்ளூராட்சி உபமாவட்ட தேர்தல்கள் அனைத்தும் கால வரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எதிர்க்கட்சிகளுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒரு சமாதானத்தீர்வினை ஏற்படுத்துவதற்காகவே இந்தத் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்டதாக அரசாங்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இப்பேச்சுவார்த்தைகள் பங்களாதேஷில் ஜனநாயகத்தைப் படிப்படியாக தேசியரீதியில் ஏற்படுத்த உதவுமென்றும் அரசு நம்புகிறது.

உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெறுவதனை அந்த நாட்டின் 22எதிர்க்கட்சிகளும் முற்றாகவே எதிர்த்தன.

'இத்தகைய தேர்தலொன்று நடைபெறுவதானால் தமது பிணக்குகளின் மீதுதான் நடத்தப்படவேண்டுமென்று'' அவர்கள் இராணுவ அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தனர். அதனால் இத்தேர்தல்களை பகிஷ்கரிக்குமாறு அவர்கள் மக்களைக் கேட்டுக்கொண்டனர்.

தேர்தல்களை ஒத்திவைப்பதென்ற அரசின் முடிவு அந்த நாட்டில் ஜனநாயகத்தை மீட்கும் எதிர்க்கட்சிகளின் கைஓங்கியிருப்பதனை எடுத்துக்காட்டுகிறது.

## 'சிரமதானம் மூலம் சகோதர உணர்வை வளர்க்க முடியும்'

(சாவகச்சேரி)

'மனிதன் தனது சுயநலத் தேவைகளை ஒதுக்கிவிட்டு பொதுநலத் தேவைகளுக்கும் நோக்கங்களுக்குமாக தனது சக்தியையும் நேரத்தையும் செலவழிப்பதன் மூலம், மானிட சமுதாயம் முன்னேற்றமான பாதையில் செல்லக்கூடிய சந்தர்ப்பம் கிட்டுகின்றது சிரமதானப் பணிகளில் நாம் ஈடுபடுவதன் மூலம் சகோதர உணர்வையும் ஒருவரையொருவர் புரிகின்ற தன்மைகளையும் இலகுவில் வளர்த்துக்கொள்ள முடியும்'

இவ்வாறு தமிழ் இளைஞர் பேரவையைச் சேர்ந்த திரு. மாவை சேனாதிராசா கைதடி ஆயுள்வேத வைத்தியசாலை வளவில் நடைபெற்ற பாரிய சிரமதானப் பணியினை முடித்து வைத்துப் பேசும்போது கூறினார்.

சர்வதேச சமாதான சேவை இயக்கத்தின் சிரமதானச் செயலாளர் திரு ச. தங்கராசா தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மற்றும் திரு. வி. எஸ். துரைராஜா, திருமதி. கனகம்மா தங்கராசா உட்பட, ஆயுர்வேத வைத்தியசாலையின் பிரதம வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி சத்தியநாதனும் கருத்துரைகள் வழங்கினர்.

சாவகச்சேரித் தொகுதியில் உள்ள பல பொதுஸ்தாபனங்களின் தொண்டர்கள் இப்பாரிய சிரமதானப் பணியில் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இந்தியாவில் துறைமுகத் தொழிலாளர் வேலை நிறுத்தம் தொடர்கிறது!

புதுடில்லி, மார்ச். 19

இந்தியாவில் பிரதானதுறைமுகங்களில் துறை மற்றும் துறைமுக தொழிலாளர்சங்கம் மேற்கொண்ட வேலைநிறுத்தம் நேற்று மூன்றாவது நாளாக நீடித்தது.

வேலை நிறுத்தத்தினால் பொருட்களை ஏற்றி இறக்கும் பணி முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளது.

இதன் எதிரொலியாக இந்தியாவின் சகல துறைமுகங்களிலும் 45 கப்பல்கள் பொருட்களை இறக்கமுடியாது நிற்கின்றன.

இதனிடையே பாதுகாப்பு அமைச்சு விடுத்த வேண்டுகோளை ஏற்று நாட்டின் பாதுகாப்பு, அத்தியாவசிய சேவைகள் தொடர்பான பணியை மேற்கொள்வதற்கு தொழிலாளர்கள் இணங்கியுள்ளனர். ஆனாலும் இத்தகைய பணியை மேற்கொள்வதற்கு பணம் வசூலிக்கப்பட மாட்டாதென்று இந்திய துறைமுகத் தொழிலாளர் சம்மேளனச் செயலாளர் திரு. அந்தோனிப்பிள்ளை நேற்று சென்னையில் தெரிவித்தார்.

இதன் விளைவாக சென்னையிலிருந்து பயணிகள் கப்பல் ஒன்று இன்று போர்ட் பிளேயருக்கு புறப்பட்டுச்செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

இச்சங்கத்தலைவர் குல்கர்னி விடுத்துள்ள செய்தியில் துறைமுகத் தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை ஏற்றுக்கொள்வதற்காக அரசு பேச்சுக்களை தொடங்கவேண்டுமென்றும், இப்போராட்டத்தை அடக்க அரசு முயன்றால் பாரதூரமான விளைவுகள் ஏற்படலாமென்றும் தெரிவித்துள்ளார்.

இவ்வேலை நிறுத்தத்தினால் ஒரு கப்பலுக்கு 10,000தொன் என்ற கணக்கில் அரசின் அந்நியச் செலாவணியில் வீழ்ச்சி ஏற்படுகிறது. [சூ]

யோகபுரம் மரணங்கள்:

## மூன்று கொலைகள்; ஒன்று தற்கொலை

(யாழ்ப்பாணம்)

யோகபுரத்தில்நடந்த புனிதமலர், கமலதாஸ் கோபிதாஸ் ஆகியோரின் மரணங்கள் கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டன.

முல்லைத்தீவு நீதிபதி திரு வி. பி. சுந்தரலிங்கம் மரண விசாரணை நடத்தினார். டாக்டர் குருசாமி இலங்கநாயகன் பிரேத பரிசோதனை செய்தார்.

வீரசிங்கம் இராசலட்சுமியின் மரணம், நீரில்மூழ்கி மூச்சுத்திணறி மரணம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டதைத்தொடர்ந்து நீதிபதி தற்கொலை எனத்தீர்ப்பளித்தார். (க)

### ஒலிவாங்கும் கருவி அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

சங்கானை கிழக்கு கிராம அபிவிருத்திச்சங்கத்தின் பனம்பொருள் கைப்பணி பயிற்சி நிலையத்துக்கு, தொழிலதிபர் திரு. க. சுவாமிநாதன் ஒலிவாங்கும் இயந்திரக் கருவி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை மேற்படி நிலையம் ஆரம்பமானது குறிப்பிடத்தக்கது. (மா)

★ ஸ்பெயின்

↓↓

★ இத்தாலி

↓↓

★ பிரான்ஸ்

சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும்
பிரயாண வசதிகளுக்கும்

AIR TRANSIT
(TRAVEL CONSULTANTS)
538B, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 22689

[1474]

# செய்திச் சிதறல்

## நமது நிருபர்கள்

### பனந்தும்பு உற்பத்தியில் புதிய வேகம்

(புலோலி)

பனம் பொருள் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. கே. நடராசாவின் துரித நடவடிக்கையைத் தொடர்ந்து கிராமிய ரீதியாகப் பனந்தும்பு உற்பத்தியில் ஊக்கம் அளிக்கப்பட்டு வருகின்றது.

இதற்கு முன்னோடியாகக் கிராமம் தோறும் பனந்தும்பு உற்பத்திச் செய்முறைப் பயிற்சிகளும், கருத்தரங்குகளும் நடாத்தப்பட்டுவருகின்றன.

### அன்பளிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட அரசினர் ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் டாக்டர்கள், தாதிமார், ஊழியர்கள் அனைவருக்கும் செஞ்சிலுவைச் சங்கத்தினர் பெற்சீற் கம்பளி போன்றவற்றை அன்பளிப்புச் செய்தனர். பிரஸ்தாப ஆஸ்பத்திரியில் இதுதொடர்பான வைபவம் ஒன்று மாவட்ட வைத்திய அதிகாரி பி. நவரெத்தினராசா தலைமையில் நடைபெற்றது.

### பரிசளிப்புவிழா

[சுழிபுரம்]

திருமுருகாற்றுப்படை மனனப்போட்டி பரிசளிப்பு வைபவம் சென்ற சனிக்கிழமை மூத்த பண்ணாகம் விசவத்தனை முருகமூர்த்தி கோவில் தீர்த்தத் திருவிழாவின்போது நடைபெற்றது. இப்போட்டி இரு பிரிவுகளாக நடாத்தப்பட்டன.

### இணைப்புக் கல்லூரி

(புலோலி)

இடம்பெயர்ந்த தமிழ் பல்கலைக் கழக மாணவர்கள் உயர் கல்வியைத் தொடரும்முகமாக லண்டன் உயர்கல்வி நிறுவனத்தின் இணைப்புக் கல்லூரி யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்து வைக்கப்படஉள்ளது

இவ்வடபகுதி லண்டன் இணைப்புக் கல்லூரி இம்மாதம் 16ம் திகதி காலை ஆனைப்பந்தி உயர் கல்விக் கல்லூரியில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### பாலைதீவு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் 12 மைல்களுக்கு அப்பால் நடுக்கடலில் சிறியதீவில் எழுந்தருளியிருக்கும் பாலைதீவு புனித அந்தோனியார் வருடாந்த உற்சவம் கடந்தஞாயிற்றுக்கிழமை திருச்சொரூப சுற்றுப்பிரகார உற்சவத்துடன் நிறைவுபெற்றது.

(வண். நிரு)

### பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

அரசாங்க பொதுசேவைத் தொழிலாளர்சங்கத்தின் யாழ். கிளைச் செயலாளராக நீண்டகாலம் பணியாற்றிவரும் சமூக சேவையாளரும், தொழிற் சங்கவாதியுமான திரு. எஸ். ஆறுமுகம் யாழ். செயலகத்தின் ஆராச்சியாக பதவிஉயர்வு பெற்றுள்ளார். (வண். நி.)

### ஏலத்தில் பாடசாலைக் கட்டிடம்!

(யாழ்ப்பாணம்)

இடிந்து விழுந்த நிலையிலிருந்த மண்டைதீவு கார்த்திகேய வித்தியாசாலையின் ஆரம்ப காலக் கட்டிடம் வட்டாரக் கல்வியதிகாரி முன்னிலையில் இருபதினாயிரம் ரூபாவுக்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டது. திருத்தியமைக்க முடியாத நிலையில் இக்கட்டிடம் இருந்த காரணத்தால், இக்கட்டிடம் இப்பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் ஏலத்தில் விற்பனைசெய்யப்பட்டது.

(வண். நி)

### ஐவருக்கு பரிசு

(சுழிபுரம்)

விசவத்தனை முருகன் பிள்ளைத்தமிழ் வெளியீட்டுச் சபையினரால் பண்ணாகம் கிராம சிறுவர் சிறுமியர்களுக்கிடையே நடாத்திய திருமுருகாற்றுப்படை மனனப் போட்டியில் பங்குகொண்டு ஐவர் பரிசு பெறுகின்றனர். பரிசு பெறுபவர்கள் விபரம் வருமாறு: செல்வி பொ ஜெயமலர், செல்வி வா. கேதீஸ்வரி, செல்வி ச. குருகுமணி தேவி, செல்வி பொ. ஜெயகௌரி, செல்வன் இ. மாயூரன்

### மீண்டும் தலைவர்

(புலோலி)

பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பிரிவுதொண்டமானாறு கிராமோதயசபையின் தலைவராக திரு து. துரைரத்தினம் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார். விசேட சேவை உத்தியோகத்தர் இரு கணபதிப்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இக்கிராமோதய சபைப் பொதுக் கூட்டத்திலேயே திரு துரைரத்தினம் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

### சனசமூக நிலையங்களின் பண்பு

(யாழ்ப்பாணம்)

"சனசமூகநிலையங்கள்கல்வி, சமூக, பொருளாதார வளர்ச்சிகளிலும் சேவையாற்ற வேண்டும்" என்று யாழ். மாவட்ட அபிவிருத்திசபையின் கைதடி உப அலுவலக அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் திரு செ. தங்கராசா, கைதடி தெற்கு விநாயகர் சனசமூக நிலையத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் வேண்டுகோள் விடுத்தார்.

சனசமூகநிலையத்துக்குஅதன் அங்கத்தவர்களினால் தொலைக்காட்சிப் பெட்டி ஒன்று இக்கூட்டத்தில் வைத்து அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

### இதுவரை 171 பேருக்கு வீடமைப்புக் கடன்

(சித்தன்கேணி)

யாழ் கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் இதுவரை 171 பேர் பத்து லட்சம் வீடுகள் அமைக்கும் பிரதமர் பிரேமதாசாவின் திட்டத்தின் கீழ் வீடமைப்புக் கடன் பெற்றுள்ளனர். யாழ். கிளிநொச்சி ஆகிய இரண்டு மாவட்டங்களிலுமுள்ள பதினாறு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும்; சாவகச்சேரி, சங்கானை ஆகிய இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுமேயே ஆகக் கூடுதலானவர்களுக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது.

### பொதுப்பரீட்சை நடக்குமா?

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் இந்தத் தவணை, பாடசாலைகளுக்கிடையிலானபொதுப்பரீட்சை நடைபெறுமா என்பது சந்தேகமாக இருக்கிறது அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்குக் காரணமாக, மாணவர்கள் கல்வியை ஒழுங்காகத் தொடர முடியாமலிருந்தது. அத்துடன் சில பாடசாலைகள் வெள்ள அகதிகளுக்காக ஒரு சில நாட்கள் வரை மூடப்பட்டிருந்தன.

### கருத்தரங்கு

(கொழும்பு)

இலங்கை மன்றக் கல்லூரி சமுதாய அபிவிருத்தி பற்றிய 5 நாள் கருத்தரங்கொன்றை இம்மாதம் 26-ம் திகதி தொடக்கம் 30-ம் திகதிவரை நடத்துகின்றது. இக்கருத்தரங்கில் சமுதாய அபிவிருத்தி பற்றிய தேவைகள். அவற்றைத் திட்டமிடும்போது கவனிக்கவேண்டிய பல்வேறுபட்ட அம்சங்கள் நடைமுறைப்படுத்தலுக்கான தொழில் நுட்பங்கள் என்பன பற்றி விரிவாக ஆராயப்படவுள்ளது

# பளை மகா வித்தியாலயம் சாதனை

## ஜி. ஸி. ஈ. பரீட்சையில் அனைவரும் சித்தி!!

(நமது பச்சிலைப்பள்ளி நிருபர்)

கிளிநொச்சி மாவட்டத்தில் பளை மகா வித்தியாலயத்திலிருந்து மிகக் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெறுவதற்கான தகுதியினைப் பெற்றுள்ளனர்.

இப்பாடசாலையிலிருந்து கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி.ஸி.ஈ (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் அனைவரும் சித்தியடைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

புதிய கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து இவ்வருடம் மிகக் கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குச் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்று அறியவருகிறது அத்துடன் கிளிநொச்சி மாவட்டம் கஷ்டப்பட்ட பிரதேசமாகவும் கருதப்படவுள்ளது.

அண்மையில் பளை மகா வித்தியாலயத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்ட வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியாம்பிள்ளை பரீட்சை முடிவுகளைப் பார்வையிட்டு அதிபர் திரு. அ. பொ. செல்லையா மற்றும் ஆசிரியர்களையும் மாணவர்களையும் பாராட்டியுள்ளார்.

### சபாஷ் மெமோறியல்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாய் கல்வி வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் 17 வயதுக்குட்பட்ட ஆண்கள்பிரிவில்மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலக் கல்லூரி முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது

13 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவிலும் 13 வயதுக்குட்பட்ட பெண்கள் பிரிவிலும் இக்கல்லூரி இரண்டாமிடத்தைப் பெற்றுள்ளது இப்போட்டிகள் சுன்னாகம் இராமநாதன் மகளிர் கல்லூரி விளையாட்டரங்கில் வட்டாரக்கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் தலைமையில் நடைபெற்றன.

### இலவச சேவை

(நெடுந்தீவு)

வைத்திய கலாநிதி எஸ். செல்வச்சந்திரன் தலைமையிலான வைத்தியக்குழு ஒன்று நெடுந்தீவுப் பகுதிகளுக்கு விஜயம்செய்து வைத்திய ஆலோசனைகளையும், சிகிச்சையையும் அளித்ததுடன் இலவச மருந்துகளையும் வழங்கியுள்ளது. சிகிச்சை மூன்று நாட்கள் தொடர்ந்து நடைபெற்றதுடன் ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளர்கள் பயனடைந்துள்ளனர். இவ்வைத்திய சேவை ஏற்பாட்டை நெடுந்தீவு திருச்சபை ஆயரின் அருட்திரு டி. எஸ். தியாகராசாவும் வாலிபர் சங்கத் தலைவர் எ. அருந்தவசீலனும் ஒழுங்கு செய்தனர்.

### ஒத்திவைப்பு

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி, பரந்தன் வட்டாரப் பாடசாலைகளுக்கிடையே இந்தத் தவணை நடைபெறவிருந்த மெய்வல்லுநர் போட்டிகள் அடுத்த தவணைக்குப் பின் போடப்பட்டுள்ளது. கிளிநொச்சி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாகவே போட்டிகள் பின்போடப்பட்டுள்ளன.

### சாரணர் இயக்கம்

(பச்சிலைப்பள்ளி)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் சாரணர் இயக்கம் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. தற்போது பளை மகாவித்தியாலயம், வட்டக்கச்சி மகாவித்தியாலயம் ஆகியவற்றில் மட்டுமே சாரணர் இயக்கம் சிறந்து விளங்குகிறது.

### சரிசமமாக முடிந்தபோட்டி

(கோண்டாவில்)

கொக்குவில் இந்துக்கல்லூரிக்கும் யாழ் மத்தியகல்லூரிக்கும் இடையே நடைபெற்ற கிரிக்கட் போட்டி, நேரம் போதாமையால் சரிசமமாக முடிவடைந்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி சகலவிக்கட்டுகளையும் இழந்து 164 ஓட்டங்களைப் பெற்றனர் செல்வன்கள் எல். கேதீஸ்வரன் 58, இ. விஜயநந்தன் 24, நா. விஜயகுமார் 20 ஓட்டங்களையும் பெற்றனர்.

### சுதந்திரக் கட்சி

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

"...சிங்களத்தை மட்டுமே உத்தியோகமொழியாக நாங்கள் ஆக்கியபொழுது நியாயமான அளவு எமது சகபிரஜைகள் தமிழ் மொழியையும், தமிழ் இலக்கியத்தையும் உபயோகிக்கிறார்கள் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டோம். தமிழ் மொழிக்கு உரிய அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமென்பதையும் ஒப்புக்கொண்டோம். இந்த மாதிரி ஏதாவது வழியில்தான் இப்பிரச்னைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இல்லையெனில் இப்பிரச்னைக்கு தீர்வே இல்லையென்று மக்கள் சொல்லுவார்கள்—"

இப்படிக்குறிப்பிட்டபிரதமர் பண்டாரநாயகா தமது உரையில் மற்றொரு கட்டத்தில்—

"...எங்களுக்கு எல்லாப் பக்கங்களிலிருந்தும் கண்டனக் கணைகள் வருகின்றன. தமிழர்கள் கண்டிக்கிறார்கள், சிங்களவர்களும் கண்டிக்கின்றனர். இந்தப் பக்கத்திலிருந்தும் கண்டனம் வருகின்றது; அந்தப் பக்கத்திலிருந்தும் வருகிறது. என்மீது எல்லா வகையான கணைகளும் விடப்படுகின்றன. சிங்கள மக்களுக்கு நான் துரோகம் செய்துவிட்டேன் என்று சிங்களத்தில் எனக்கு அநாமதேயக் கடிதங்கள் வருகின்றன. தமிழினத்தை அழித்துவிட்டதாகத் தமிழர்கள் கூறுகிறார்கள். எல்லோரும் என்னைத் தொலைத்துக் கட்டவே விரும்புகிறார்கள். எதுசரியென்று நான் நினைக்கிறேனோ அதை விசுவாசமாகச் செய்யும் பொழுது என்னைத் தொலைத்துக்கட்டினால் எனக்கு அதில் ஆட்சேபமில்லை சபாநாயகர் அவர்களே, உண்மையில் இதில் யாராவது வெற்றி பெற்றால் நான் குறைப்படமாட்டேன். ஆனால் நானும் எனது அரசாங்கமும் நாங்கள் சரியானவற்றையே செய்கின்றோமென்பதில் பூரண திருப்தியடைந்துள்ளோம் —"

### உயிருடன் அவர் இருந்திருந்தால்

பண்டா—செல்வா ஒப்பந்தம் கிழிக்கப்பட்டபின் தமிழ்மொழி (விசேஷ விதிகள்) மசோதாவைக் கொண்டுவந்த இப்படிக்குறிப்பிட்ட திரு. எஸ். டபிள்யூ. ஆர் டி. பண்டாரநாயக்கா மேலும் சிலகாலம் உயிரோடு இருந்திருந்தால் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அமுல் செய்திருப்பார் என்று கருதலாம்.

### பிரதேசசபையும் மாகாணசபையும்

பிரதேச சபை யோசனை பண்டா-செல்வா ஒப்பந்தத்துடன் கிழிக்கப்பட்டபின் 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதத் தேர்தலின்பின்னும் ஜூலை மாதத் தேர்தலுக்கு முன்னும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர்களுக்கும் தமிழரசுக் கட்சித் தலைவர்களுக்குமிடையில் நடந்த ஆட்சிக்குவர ஆதரவளிக்கும் பேரப்பேச்சு வார்த்தையில் மாவட்ட சபைகள் அமைப்பதற்கு இணக்கம் ஏற்பட்டிருந்தது.

1965-ம் ஆண்டுத் தேர்தலின் பின் திரு. டட்லிசேனநாயகா பிரதமராகி அமைத்த தேசிய அரசாங்கம் டட்லி- செல்வா ஒப்பந்தத்தின் அடிப்படையில் மாவட்டசபை அமைக்க சம்மதித்திருந்தது.

ஆனாலும் இவையாவும் இறந்த உறுதிகளாகிவிட்டன.

இன்று பிரதேச சபைகள் அமைப்பதற்கோ அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா உருவாக்கிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆதரவில்லை இச் சபைகளை எதிர்ப்பதாகக் கட்சியின் தலைவி திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகா மகாசங்கத்தினரிடம் தெரிவித்துவிட்டார்.

மகாசங்கத்தினரும் இச்சபைகளை எதிர்க்கிறார்கள்.

திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா உயிர்த்தெழுந்து வந்தாலும்...!!!

### மேதினத்தை ஒன்றிணைந்து நடத்த முடிவு!

(யாழ்ப்பாணம்)

984 மேதினக் கொண்டாட்டத்தைச் சகல யூ. என். பி. எதிர்ப்புச் சக்திகளையும் ஒன்றிணைந்து நடத்துவதென முடிவுசெய்யப்பட்டுள்ளது. இம்முடிவை லங்கா தொழிற்சங்கங்களின் சம்மேளன செயலகத்தில் கூடிய தொழிற்சங்கள் கொள்கையளவில் ஏற்றுள்ளன.

மாவட்டச் செயலாளர் திரு எஸ். விஜயானந்தன் தலைமையில் இக்கூட்டம் இடம்பெற்றது. ஐக்கிய தொழிலாளர்சம்மேளனம், அரசாங்க பொதுச் சேவை தொழிற் சங்க சம்மேளனம் இலங்கை ஆசிரியர் சங்கம், நவலங்கா தபால் தந்தித் தொடர்பு சேவையாளர் சங்கம், அகில இலங்கை அரசினர் தபால் தொழிலாளர் சங்கம், சீமெந்து பொதுத்தொழிலாளர் சங்கம், அரசாங்க சுகாதார சேவை தொழிலாளர் சங்கம் ஆகியன இக்கூட்டத்தில் கலந்துகொண்டன.

ஏனைய தொழிற்சங்கங்களுடனும் தொடர்புகொண்டு ஐக்கிய மேதினத்தை வலுவூட்டவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது இது சம்பந்தமாக மீண்டும் ஒரு கூட்டம் நடத்தப்படவுள்ளது. (வி)

### யாருடையது?

ஒருவன்பர் யாழ். பஸ்நிலையத்திலிருந்து திருவாளர்கள் அப்புலிங்கம் சுப்பையா, நல்லையா சற்குணராசா ஆகியோரின் அடையாள அட்டைகளையும், யாழ். இராசாவின் தோட்டத்தைச் சேர்ந்த திரு. ப. ரவீந்திரன் என்பவர் இணுவில் திரு சுப்பிரமணியம் தம்பிஐயாவின் அடையாள அட்டையையும் கண்டுஎடுத்து ஈழநாடு அலுவலகத்தில் ஒப்படைத்துள்ளார்கள் உரியவர்கள் அலுவலக நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளவும்.

# "பனைவளத்திலேயே வடக்கு, கிழக்கின் பொருளாதாரம் தங்கியுள்ளது!"

## நிபுணர் வெளியிட்ட கருத்து

(புலோலி)

''இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங்களின் பொருளாதாரத்தைப் பனை வளமே தங்கியுள்ளது. இப் பனை வளத்தைச் சிறந்த முறையில் பயன் படுத்தத்தொடங்குவதின் மூலமே இந்நாட்டின் பொருளாதாரம் தன்னிறைவைக் காணமுடியும் பனை அபிவிருத்தி நடவடிக்கைகள் பெரிதும் பலன் அளித்து வருகின்றன.

இவ்வாறு சாமன் வெல்த் நாடுகள் அமைப்பின் விசேட ஆலோசகரும், இந்திய நிபுணருமான திரு. கே சம்பந்தம் குறிப்பிட்டார். இணுவில் அளவெட்டி தெங்கு பனம் பொருள் கூட்டுறவுச் சங்க ஆதரவில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இக்கருத்தரங்கு கைலாசபிள்ளை ராசமணி அபிவிருத்திச் சங்கத் தலைவர் திரு க. ஸ்ரீபாஸ்கரன் தலைமையில் நடைபெற்றது. திரு சம்பந்தம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

''தற்போது வெளிநாட்டவர்கள் இயற்கை மூலவள உற்பத்திப் பொருட்களிலேயே நாட்டம் கொள்ளத்தொடங்கியுள்ளனர் செயற்கைப் பொருட்களிலான மோகம் வெளிநாடுகளில் வெகுவாகக் குறைந்து வருகின்றது. சீனிக்குப் பதிலாக எமது பனஞ்சீனியைப் பெரும் அளவில் கொள்வனவு செய்வதற்கு அமெரிக்கா தயாராகவுள்ளது ஆனால் எம்மிடம் அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யக் கூடிய அளவு பனஞ்சீனி உற்பத்தி செய்யப்படவில்லை.

''ஒருபனை வருடம் ஒன்றுக்கு இருநூறு ரூபா பெறுமதியான சீனியை உற்பத்தி செய்கின்றது ஆனால் சீனி உற்பத்திக்கான பதநீர் காலங்களைச் சரியான முறையில் பயன்படுத்தாததால் பல கோடி ரூபா வெளிநாட்டுச் செலாவணியை இலங்கை வருடம் தோறும் இழந்து வருகின்றது.

## மங்கிய ஒளியில் மின்சாரம்

(பண்டத்தரிப்பு)

பிள்ளையார் தெற்கு, அம்மன் வீதி, சென் ஜேம்ஸ் வீதி ஆகிய பகுதிகளில் இரவு வேளையில் மின்சார வெளிச்சம் மிகவும் மங்கிய ஒளியில் இருப்பதால் இப்பகுதி மக்கள் மிகுந்த சிரமமடைந்து வருகின்றனர்.

வீடுகளிலுள்ள மின்பல்புகளும், ரியூப் லைற்றுகளும் மிகவும் மங்கிய ஒளியில் இருப்பதால் இரவில் மாணவர்கள் பாடங்களைப்படிக்க முடியாதிருப்பதாகவும் குளிர்சாதனப் பெட்டி, தொலைக்காட்சிப்பெட்டி ஆகியன செயலற்று இயங்காத நிலையில் இருப்பதாகவும் இப்பகுதிகளிலுள் பொதுமக்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

## சிறுவனைக்காப்பாற்றச்சென்ற மாணவன் குளத்திற்கு பலி!

[யாழ்ப்பாணம்]

ஒல்லித்தேங்காயில் நீச்சல் பழகிய ஒன்பது வயதுச்சிறுவன் ஆபத்தில் சிக்கியபோது அவனைக் காப்பாற்றச்சென்ற உயர்வகுப்பு மாணவன் குளத்தில் மூழ்கி மரணமானார்.

நாயன்மார்கட்டைச்சேர்ந்த 19 வயதான சுப்பிரமணியம் கர்ணன் என்ற மாணவரே பலியானவராவார்.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினார். யாழ். சிறு குற்றத்தடுப்புப் பிரிவு கான்ஸ்டபிள் நடேசன் சாட்சியை ஆஜர் செய்தார்.

ஐமுனு ஏரியிலுள்ள பூதராயர் குளத்தில் கர்ணனும், அவரது சித்தப்பா சிறிதரனும் குளித்துக்கொண்டிருந்ததாகவும் அப்போது அங்கு சில பெண்களுடன் வந்த ஒன்பது வயது கோகுலன் ஒல்லித்தேங்காய் கட்டி நீச்சல் பழகியதாகவும் தேங்காய் அறுந்துவிடவே சிறுவன் தத்தளித்ததாகவும் சிறுவனை மீட்கச்சென்ற கர்ணன் சேற்றில் புதைந்ததாகவும் விசாரணையில் கூறப்பட்டது

சிறிதரன் நீந்திச் சென்று கோகுலனை மீட்டுவந்து கரையில் பார்த்தபோது கர்ணனைக் காணவில்லையென்றும், குளத்தில் தேடிப்பலன் கிடைக்காததினால் குருநகரிலிருந்து சுழியோடிகளை அழைத்து வந்து சடலத்தை மீட்டதாகவும் கூறப்படுகிறது.

கிளிநொச்சியைச் சேர்ந்த கர்ணன், யாழ். கனகரத்தினம் மகாவித்தியாலய, ஜி. சி. ஈ உயர்வகுப்பு மாணவனென்றும் இவர் பரீட்சையின் முடிவைஎதிர்பார்த்துக்கொண்டிருந்தாரென்றும் விசாரணையில் கூறப்பட்டது

## பண்புமிகு பெரியார்



சமீபத்தில் இவ்வுலக வாழ்வை நீத்த திரு நீக்கிலாப்பிள்ளை எஸ்தாக்கி அவர்களை காவ்யா நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் அதிபராகக் கடமை யாற்றத் தொடங்கிய காலத்திலேயே நேரிற் சந்திக்க நேர்ந்தது. பொறுமையின் இருப்பிடம் நேர்மையான நடை, சமயத்தின் சாயல் ஆகிய பண்புகள் அவரிடம் பிரதிபலிப்பதைக் கண்டேன்.

தமது ஆசிரிய சேவையை மிகச் சிறந்த முறையில் நாட்டுக்குச் செய்து பின்னரும் ஓய்வூதியம் பெற்ற காலத்திலும் முழுநேர ஊழியனாகச் ''சேவையே ஜெயம்'' என்ற வாக்குக்கு இணங்க யாழ். மறைமாவட்டக் கத்தோலிக்க சபையத்தவரினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தயார் செய்யும் வகுப்புக்களை முன்னின்று நடாத்தினார். இரவு பகல் பாராது உழைத்தார் அயற்பாடசாலைகளிலும் இவ்விடங்களை மேற்கொண்டார். பங்குத்தந்தை அவர்களுக்குச் சகலவிடயங்களிலும் வலதுகரம்போல விளங்கி உதவி புரிந்தார்.

கோபம் என்பது அவரது முகத்தில் காண்பதரிது. ஓர் வகைச் சிரிப்பால் எவரையும் வசியம் பண்ணும் தன்மை இயல்பாகவே அவருக்குண்டு அவரிடம் ஒருவரைப் பற்றிக் குறை கூறினால் ''நீர் உம்மைத்திருத்தும்'' என்று அக்குறை கூறுபவரிடம் திருப்பிக் கூறுவார். அப்படிக் கூறுவதை நான் அவரிடம் எப்பொழுதும் கண்டிருக்கிறேன்

அவர் தமது நாவந்துறை மக்கள் ஒழுக்கம், கல்வி, சமயம், ஒற்றுமை, பண்பாடு முதலியவற்றில் சிறந்தவர்களாக வாழவேண்டுமென்ற அவா உடையவராக இறக்கும் வரை வாழ்ந்து கொண்டிருந்தார் எனவே அவர் கூறும் அமுத வாக்காகிய ''நீர் உம்மைத் திருத்தும்'' என்ற நற்காரியத்தை நாவாந்துறை வாழ்மக்களாகிய நாம் கைக்கொண்டு ஒழுகுவதே அப்பெரியாருக்குச் செய்யும் கடனாகும்.

பாடசாலையில் அதிபராகக் கடமை ஆற்றிய காலத்தில் சக ஆசிரியர்களின் திறமைகளை அவர்களிடமிருந்து அதிகாரப் போர்வையின்றி அன்பின் வழியின் மூலம் வெளிக்கொணர்ந்து மாணவர்களுக்குப் புகட்டச் செய்த பெருமையை அவர்களுடன் கடமை புரிந்த ஆசிரியர்கள் கூறக் கேட்டிருக்கின்றேன்.

—லாசறஸ் குணநாயகம்

## மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அராலியக்கபதி- மண்டைகாடு அருள்மிகு பூர்ணபுஷ்கலாம்பிகாஸமேத ஸ்ரீ ஹரிஹர புத்திர சுவாமி (ஐயனார் கோவில்) புனராவர்த்தன அஷ்ட பந்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இம்மாதம் 19ம் திகதி ஆரம்பமாகியுள்ளது 22ம் திகதி வரை தொடர்ந்து நடைபெறும்.

இக்கும்பாபிஷேகம் வண்ணை செந்தில் கதிர்வேலாயுதசுவாமி கோவில் பிரதம குரு சிவஸ்ரீ இ. நாராயணக்குருக்கள் தலைமையில் பல குருக்களினால் நடாத்தப்படும்.

தொடர்ந்து 45 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெறும். (சூ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

## இன்றைய பலன்

பங்குனி மாதம் 7-ந் திகதி
(20—3—84)
செவ்வாய்க்கிழமை

மேடம்: ஆத்திரப்படுவதன் மூலம் அருமையான சந்தர்ப்பத்தை இழக்க நேரிடும் மேலிடத்தின் செல்வாக்குப் பாதிக்கப்படலாம் அயலவர்களுடன் அன்புடன் பழகிக் கொள்ளவும்.

இடபம்: சுற்றுடலிலுள்ள செல்வாக்கு வரும் கொடுத்த வாக்குறுதியைக் காப்பாற்றுவதில் அதிக கவனம் செலுத்துவீர்கள் குடும்பத்தில் பிணக்குகள் பலமடையும் சிலருக்கு அதிர்ஷ்டலாபமும் கிடைக்கலாம்.

மிதுனம்: எதிர்பார்த்தவேதனம் இடையில் தடைப்படலாம் சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கலாம் சகோதரவழியால் சஞ்சலத்திற்கும் இடமுண்டு தெய்வ நம்பிக்கை வேண்டும்.

கடகம்: அந்தஸ்தில் உயர்வு தென்படும் எதிர்பார்த்த பதவி உயர்வுக்கு இன்று முன்னோடி நடவடிக்கை எடுக்கப்படும் வழக்குவிவகாரங்களில் வெற்றி காணும்.

சிங்கம்: கூட்டு விவகாரத்தல் முன்னேற்றமுண்டு வெளியூரிலிருந்து திருப்திகரமான செய்தி கிடைக்கும் கடமையில் ஆர்வம் கிடைக்கும் டாக்டர்களுக்கு செல்வாக்குப் பெருகும் நிம்மதியான தினம்.

கன்னி: வாய்வுக்கோளாறு உடல் நலத்தைப் பாதிக்கலாம் உணவு விசயத்தில் சுகாதாரம் வேண்டும் தானிய நஷ்டத்திற்கு இடமுண்டு வியாபாரிகள் புதிய முதலீட்டை தவிர்த்துக் கொள்ளவும்.

துலாம்: அவசர முடிவின் மூலம் ஆபத்தை விலைகொடுத்து வாங்குவீர்கள் மனதில் அமைதிகுன்றும் அயலவர்களின் குறுக்கு வழித்தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறும் அடக்கம் விரும்பத்தக்கது.

விருச்சிகம்: ஒவிமையான சூழ்நிலை உருவாகும் வீட்டிலுள்ளவர்களின் அன்பும் ஆதரவும் தாராளமாகக் கிடைக்கும் இருமனம் கலந்தவர்களின் மத்தியில் இனிமையான சம்பவம் இடம்பெறும்.

தனுசு: அன்னியர்கள் சகவாசம் சங்கடத்தில் மாட்டி வைக்கும் அவசர முடிவின் மூலம் சில துன்பங்கள் விளையலாம் எதிரிகளின் சூழ்ச்சிகள் மன நிம்மதியைக் குறைக்கும் தொழிலிலும் தடைகள் உண்டு.

மகரம்: தெய்வ நம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும் புண்ணியஸ்தல யாத்திரை பொன்று மேற்கொள்ளப்படலாம் உடல்நிலையில் நல்ல முன்னேற்றம் தென்படுகிறது உற்சாகமான தினம்.

கும்பம்: எதிர்பார்த்தபெரும் வரவுக்கு இடமுண்டு பூமியால் லாபம் கிடைக்கும் புத்திரர் வழியாலும் நன்மையுண்டு.

மீனம்: கூர்மையான ஆயுதங்களுடன் பழகாதிருக்கவும் போக்குவரத்து விடயத்தில் அதிக கவனம் செலுத்தவேண்டும் திடீர் திருப்பம் உங்களைத் திகைக்க வைக்கலாம் பேச்சைக் குறைக்கவும்.

சோதிடக்கலாநிதி
திருமலை வே. ரவீந்திரன்

## ரூபவாஹினியில் இன்று

மாலை

| | |
|---|---|
| 6·00 | ஜெர்மன் உதைபந்தாட்டம் |
| 6-55 | செய்திகள் (தமிழ் |
| 7-15 | 'சோயா' பற்றிய விவரணச் சித்திரம் (தமிழ்) |
| 7-40 | 'பிளேக்—7' ஆங்கிலச் சித்திரம் |
| 8-15 | செய்திகள் (சிங்களம்) |
| 8-35 | 'பிளேக்—7' தொடர்ச்சி |
| 8-55 | 'டாட்ஸ் ஆமி'—நகைச்சுவைச் சித்திரத் தொடர் (ஆங்கிலம்) |
| 9-30 | செய்திகள் (ஆங்கிலம்) |
| 10-00 | 'ஹவாய் பைவ் ஓ'—துப்பறியும் தொடர் (ஆங்கிலம்) |
| 10-30 | உலகச் செய்தித் தலைப்புகள் |
| 10-35 | 'ஹவாய் பைவ் ஓ' தொடர்ச்சி |
| 10-55 | நிகழ்ச்சிகள் முடிவு. |


# ஆர்பிக்கோ

## இம்மாதச் சலுகைப் பொருள்

## 10% விலைக்கழிவு

## ஏற்றுமதித்தர ஆர்ப்பிக்கோ ரப்பர் தடுக்குகள்

| டிசைன் | | அளவு |
|---|---|---|
| வரியிட்டது | — | 533.4 மி. மீX330 2 மி. மீ. (21''X13'') |
| முள்குதியிட்டது | — | 508 மி. மீX355 6 மி. மீ. (20''X14'') |
| முள்குதி/டயமன்ட் | — | 533 4 மி. மீX355 6 மி. மீ (21''X14'') |
| வரம்பிட்டது | — | 533 4 மி. மீX355 6 மி. மீ. (21''X14'') |
| டயமன்ட் | — | 635 மி மீX635 மி. மீ. (25''X25'') |
| சதுரமிட்டது | — | 533 4 மி மீX355 6 மி. மீ. (21''X14'') |
| தேன்கூடுடிசைன்கள் | — | 588 மி. மீX388 மி மீ (23''X15'') |
| குளியலறைத் தடுக்கு | — | 762 மி. மீX355.6 மி மீ. (30''X14'') |
| வரியிட்ட தடுக்கு | — | 914 மி மீ. அகலம் (36'') |

விலைகள் ரூபா 12/- முதல் ரூபா 95/-வரை

கிடைக்குமிடம்
யாழ்ப்பாணம் - டிறுன்ஸ் லங்கா மார்க்கட்டிங் லிமிட்டெட், மோடல் மார்கட் கட்டிடம்.

றிச்சர்ட் பீரிஸ் அன்ட் கம்பனி லிமிட்டெட்,
69, ஹைட்பாக் கோணர், கொழும்பு-2. தொலைபேசி: 25705-6

(இச்சலுகை 1984 மார்ச் 31-ந் திகதி வரை மட்டுமே)

**சாந்தி** (யாழ். நகர்)
10-30, 2-30, 6-30
ஜெய்சங்கர் - ஜெயலலிதா
**வந்தாளே மகராசி**
(புதிய பிரதி)

**வெஸ்லி** காங்கேசன்துறை
தினசரி 2-30, 6-00
ஜெயசித்ரா
**கல்யாணமாம் கல்யாணம்**

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
ஜெய்சங்கர் - சாவித்திரி
**ஐக்கம்மா**
21 முதல்
**ஆயிரம் ஜென்மங்கள்**

**மனோகரா** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-15, 4-45, 7 00 p. M.
CLINT EASTWOOD
in
**Branco Billy**
(Coulor)

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர் - சரோஜாதேவி
**தாயைக் காத்த தனயன்**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
கமலஹாசன் - மாதவி
**டிக் டிக் டிக்**
(சினிமாஸ்கோப்)

இதுவே கடைசி வாரம்
**ராஜா** (யாழ்நகர்)
தினசரி 10-30, 2-30, 6-00, 9-00
கமல் — ஸ்ரீதேவி — திவா
**மீண்டும்கோகிலா**
(சினிமாஸ் கோப்)

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-00, 4-30, 7-00, 9-30 p. m.
Jennifer O Neil in
**SCANNERS**
Their thoughts can kill
Strictly For Adults
(இப் படக்காட்சிகள் அதிர்ச்சியும் மனித இரத்தமும் சம்பந்தப்பட்டவையாக முன்கூட்டியே எச்சரிக்கிறோம்)
From 21-3-84
Charlton Heston in
MOUNTAIN MEN
(Adults Only)

**விஜேதா** (யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
ரவீந்தர் - ரூபா
**ஒரு தலைராகம்**

**வெலிங்டன்**
தினசரி 10 30, 2-15, 4-30, 7-00, 9-15
Harrison Ford, Laren Allen in
RAIDERS OF THE LOST ARK
(more suitable for adults)
(Color)
1981-ம் ஆண்டு அகில இலங்கை திரைப்படவிழாவில் முதல் திறமையான படமாக தெரிவு செய்யப்பட்டது. See it before it's too late

வலி வடக்கு

## உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

வலி வடக்கு உதவி அரசாங்க அதிபர் அலுவலக 18-வது ஆண்டுவிளையாட்டு விழாவை யொட்டி உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை தெல்லிப்பழை மகாஜனா கல்லூரி விளையாட்டுத் திடலில் ஆரம்பமாகும்.

வடமாநில தேர்தல் ஆணையாளர் திரு. த. அமுதசாகரன் பிரதம அதிதியாக கலந்து கொள்வார். திருமதி நிர்மலா அமுதசாகரன் பரிசில்களை வழங்குவார். மகாஜனாக் கல்லூரி அதிபர் திரு. த. சண்முகசுந்தரம், கௌரவ விருந்தினராக கலந்து கொள்வார்.

இன்று பிற்பகல் 4-00 மணிக்கு இளைஞர் விளையாட்டு கழகம், எதிர் காங்கேசன்துறை மஸ்ரா விளையாட்டு கழகம் பிற்பகல் 5-00 மணிக்கு காங்கேசன்துறை விளையாட்டு கழகம் எதிர் மல்லாகம் கிராம முன்னேற்ற சங்க விளையாட்டு கழகம். 24-ம் திகதி பிற்பகல் 4-00 மணி வசாவிளான் மின்மினி மன்ற விளையாட்டு கழகம் எதிர் காங்கேசன்துறை இளைஞர் முன்னேற்றச்சங்க விளையாட்டு கழகம். (க)

மாங்குளம் சண்முகதாஸ் விடுதலை:

# "சந்தேகநபரைகைதுசெய்தது சட்டத்திற்கு முரணான செயல்"

முல்லைத்தீவு நீதிபதி

(யாழ்ப்பாணம்)

மாங்குளத்தில் கைதுசெய்யப்பட்ட சோமசுந்தரம் சண்முகதாஸ் விடுதலைசெய்யப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி வி பி. சுந்தரலிங்கம் முன்னிலையில், சந்தேகநபர் ஆஜர் செய்யப்பட்டார்.

யாழ் விசேட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவிலிருந்து கிடைத்த தகவலைத் தொடர்ந்து மாங்குளம் பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்செய்தனர்.

சந்தேகநபரை மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யுமாறு பணிக்கும்படி பொலிஸார் கேட்டுக்கொண்டனர்.

சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி சிவபாலேந்திரா, மாங்குளம் பொலிஸார் இச்சந்தேகநபரை கைது செய்து, மன்றில் ஆஜர் செய்வது சட்டத்திற்கு முரணான செயல் என்றும், பிடியாணை மூலம்தான் இவரை கைது செய்யலாமேதவிர, வேறு ஒரு விதத்திலும் இவரை கைது செய்ய மன்றின் மூலம், இன்னொரு மன்றுக்கு பாரப்படுத்தக்கேட்பது சட்டத்திற்கு முரணான செயல் என்றும் கூறினார்.

நீதிபதி சந்தேகநபரைக் கைதுசெய்தது சட்டத்திற்கு முரணான செயல் என்று கூறி எதுவித நிபந்தனையுமின்றி விடுதலைசெய்தார். (க)

## "வடக்கிலிருந்து பத்து லட்சம் ரூபா பெறுமதியான சங்குகள் ஏற்றுமதியாகும்!"

வடமாகாண கடற்றொழில் கூட்டுறவு சமாஜத் தலைவர்

(மானிப்பாய்)

ரூபா பத்து லட்சம் பெறுமதியான சங்குகள் விரைவில் வடமாகாணத்திலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்படவிருக்கின்றன.

இத்தகவலை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாசத் தலைவர் திரு. கே. எஸ், பொன்னுத்துரை தெரிவித்தார்.

ஆனைக்கோட்டை சாவல்கட்டு கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் ஏற்பாடு செய்திருந்த கருத்தரங்கு ஒன்றிலேயே திரு. பொன்னுத்துரை இத்தகவலை வெளியிட்டார்.

சென்ற திங்கட்கிழமை மேற்படி கூட்டுறவுச் சங்கக் காரியாலயத்தில் இக்கருத்தரங்கு மாவட்ட கடற்தொழில் அதிகாரி திரு. கே ரி, சிவஞானத்தினால் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கப்பட்டது

திரு பொன்னுத்துரைதமது உரையின் போது, ஆனைக்கோட்டை சாவல்கட்டு சங்கத்தால் சேகரிக்கப்படும் கடலட்டைகள், சங்குகள் ஆகியவற்றை வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசமே ஏற்றுமதி செய்கின்றது என்றும், இதன் காரணமாக சங்கமும் சமாசமும் நல்ல இலாபத்தைப் பெறவாய்ப்பிருக்கிறதென்றும் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் நிலவளத்திலும் பார்க்க கூடுதலாக கடல் வளத்திலிருந்து வருமானத்தை அதிகமாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், ஜப்பான் நாட்டில் ஆழ்கடல் மீன்களிலும் பார்க்க கரையோரங்களில் பிடிக்கப்படும் மீன்களுக்கு கூடுதல் விலை கொடுக்கப்படுகின்றதெனவும் கூறினார் (இ)

## அடையாள அட்டைக்கு ஏராளமானோர் விண்ணப்பம்!

(யாழ்ப்பாணம்)

'அடையாள அட்டை பெறுவதற்கு தினமும் நூற்றுக்கு மேற்பட்டோர் விண்ணப்பித்துவருகின்றனர். மாதந்தோறும் சராசரி 2500 முதல் 3000 பேர்வரை அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கின்றனர். யாழ்ப்பாணம், கிளிநொச்சி. வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் இங்கு அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம்.

யாழ் ஆட்களைப் பதிவுசெய்யும் காரியாலய நிர்வாக உத்தியோகத்தர் திரு. வி. இராசையா மேற்கண்டவாறு தெரிவித்தார் அவர் மேலும் தெரிவித்ததாவது;

'16 வயது பூர்த்தியான சகலரும், அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்கலாம். கிராம சேவையாளரிடம், விண்ணப்ப பத்திரத்தை பெற்று, அதனை நிரப்பி, கிராம சேவகரின் பொறுப்புடனும் படங்களுடனும் உதவி அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படும். அவர் இங்கு அனுப்பி வைப்பார். இங்கிருந்து அந்த விண்ணப்பங்கள் கொழும்பிற்கு அனுப்பப்பட்டு சாதாரணமாக 8 மாத காலத்திற்குள் அடையாள அட்டை கிடைத்துவிடும்.

அவசரமாக அடையாள அட்டை தேவைப்படுவோர், உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுடன் வழக்கம்போல் விண்ணப்பித்தால் 6 வார காலத்திற்குள் பெற்றுக்கொள்ளமுடியும்.

"புதிதாக 40 வயதானவர்களும் 50 வயதானவர்களும் பலர் அடையாள அட்டைக்கு விண்ணப்பித்துள்ளனர் இவர்கள் இவ்வளவு காலமும், ஏன் விண்ணப்பிக்கவில்லை எனத் தெரியவில்லை.

### பொலிஸில் புகார்

"அடையாள அட்டையை தொலைத்தவர்கள் உடன் அது பற்றிப் பொலிஸில் புகார் செய்ய வேண்டும். அவர்கள் தரும் இரண்டு பிரதிகளில் ஒன்றை கிராம சேவகரின் சிபார்சுடன், படங்களுடன் உதவி அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்தால், மற்றொரு அடையாள அட்டை பெற முடியும். இதற்கு விண்ணப்பிப்பவர்கள், பழைய அடையாளஅட்டையின் இலக்கத்தை குறித்து அனுப்பினால் தாமதத்தை தவிர்த்துக் கொள்ள முடியும்.

### பழுதான அட்டை

"பழுதடைந்த அடையாள அட்டைக்கு பதிலாக மற்றொரு அடையாள அட்டை பெற முடியும், செல்லாததாக இருந்த திருமதியான பெண்களும், முகவரி மாற்றம் பெற்றவர்களும், பதவி தரம் மாறியவர்களும், பட்டத்தில் மாற்றமடைந்தவர்களும், மற்றொரு அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்ளமுடியும்.

"உதவி அரசாங்க அதிபர் காரியாலயத்தில் இதற்கான ஒரு 'ரேஸ்" கவர் பத்திரத்தை பெற்று, அதனை நிரப்பி படங்களுடன் உதவி அரசாங்க அதிபரின் சிபார்சுடன் கொழும்பு ஆட்களைபதிவு செய்யும் திணைக்களத்திற்கு அனுப்பி அடையாள அட்டை பெற்றுக்கொள்ளலாம். (க)

## துப்பாக்கி வழக்கு சந்தேகநபர் 1000 ரூபா பிணையில் அனுமதி!

(யாழ்ப்பாணம்)

அனுமதிப்பத்திரமின்றி துப்பாக்கிவைத்திருந்ததாக கைது செய்யப்பட்ட இ. ஜெகநாதன் 1000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி திரு. வி. பி. சுந்தரலிங்கம் முன்னிலையில் சந்தேகநபர் ஆஜர் செய்யப்பட்டார்.

அவசர காலச்சட்டத்தின் கீழ் சந்தேகநபரை விளக்கமறியலில் வைக்கும்படி ஒட்டுசுட்டான் பொலிஸ் பொறுப்பதிகாரி மனு செய்திருந்தார்.

சந்தேகநபரை அவசரகாலச்சட்டத்தின் கீழ் றிமாண்டில் வைக்குமாறு கேட்பது சட்டத்துக்கு முரணானது எனத்தெரிவித்த நீதிபதி அவரைபிணையில் செல்ல அனுமதித்தார். (அ)

## மண்ணெண்ணெ வாங்கச் சென்ற சிறுவன்பிணமாகமிதந்தான்

(கிளிநொச்சி நிருபர்)

முதல்நாள் மாலை மண்ணெண்ணெ வாங்கச் சென்ற சிறுவன் மறுநாள் காலை பிணமாக வாய்க்காலில் இருந்து மீட்கப்பட்ட பரிதாப சம்பவம் ஒன்று கிளிநொச்சி பாரதிபுரத்தில் நடைபெற்றுள்ளது.

தர்மலிங்கம் காந்தரூபன் (10 வயது) என்னும் சிறுவனே மரணமானவராவார். இம்மரணம் சம்பந்தமான விசாரணையை கிளிநொச்சி மரண விசாரணை அதிகாரி மு. யோகலிங்கம் மேற்கொண்டார். சாட்சிகளை கிளிநொச்சி பொலிஸைச் சேர்ந்த எ. இராமசாமி ஆஜர் செய்தார்.

சம்பவ தினம் மாலைவேளை. கடைக்கு மரணமான சிறுவன் காந்தரூபன் மண்ணெண்ணை வாங்கச் சென்றதாகவும் அன்று முழுவதும் இவர் வீடு திரும்பாததால் பல இடங்களிலும் தேடியும் காணாததால் கவலைகொண்ட பெற்றோர் பொலிஸில் புகார் செய்ய முற்பட்டவேளை அடுத்தநாள் காலை பேரூந்தில் ஒன்று மிதப்பதாக தெரிவிக்கப்படவே வாய்க்காலை இந்து துரம் தேடிப்பார்க்கவே பாலம் ஒன்றின் அருகில் இவரது பிணம் மிதப்பதைக் கண்டு மீட்டதாகவும் சாட்சியங்களில் இருந்து தெரிய வந்தது

மரணமானவரின் தந்தை இ. தர்மலிங்கம், தாய் த. வசந்தகுமாரி ஆகியோரின் சாட்சியத்தை தொடர்ந்து விபத்து மரணம் என தீர்ப்பு வழங்கப்பட்டது.

## புதிய நிர்வாகிகள்

(சுழிபுரம்)

சிதம்பர அம்பலவாணசுவாமிமாணு முதலியார் மடம் தொல்புரம் சுழிபுரம் தர்ம கர்த்தாசபை புதிய நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர் திரு: சி.] அப்புத்துரை காரியதரிசி சன். கந்தையா தனாதிகாரி இ சண்முகநாதன் நிர்வாகசபை மேலும் தெரிவு செய்யப்பட்டது.

கடைசி இலதினங்கள்
**நீகல்** (யாழ்.நகர்)
தினசரி: 10-30, 2-30, 6-15
**பயணங்கள் முடிவதில்லை**
அரிய சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்
Next:
GALAXY OF TERROR
English Action

## வெளியீட்டுவிழா

(யாழ்ப்பாணம்)

"ஆத்மீக நெறிதான் அல்லலமிகுந்த வாழ்வில் அகப்பட்டிருக்கும் நமக்கு வழிகாட்டியாக அமையும்." இவ்வாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் திருஞானசம்பந்த சுவாமிகள் அருளிய நமச்சிவாயத்திருப்பதிகத்தை வெளியிட்டுப்பேசுகையில் கூறினார்.

கடந்தவாரம் திருநெல்வேலி கிழக்கு ஸ்ரீ காளியம்மன் ஆலயத்தில் அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் நமச்சிவாயப் பதிக வெளியீட்டு விழா நடாத்தப்பட்டது. (ப)

## உடுவில் இரட்டைக் கொலைவழக்கு:

# மாமியின் வைரக்கொடியை

## வளர்ப்பு மகன் அடையாளம் காட்டினுர்

(யாழ்ப்பாணம்)

''எனது மாமி அன்னம்மா இரவில் படுக்கைக்குச் செல்லும் போதெல்லாம் தாலிக் கொடியை கழற்றி தலையணைக்கு கீழ் வைத்து விட்டுப் படுப்பார். மற்றும், காப்பு, தோடு, மூக்குமின்னியை கழட்டுவதில்லை''.

உடுவில் இரட்டைக்கொலை-கொள்ளை வழக்கில் நேற்று சாட்சியமளித்த இறந்தவர்களின் வளர்ப்பு மகனுன கடுவிலைச்சேர்ந்த பொன்னையா சண்முகநாதன் மேற்கண்டவாறு கூறினுர்.

இவ்வழக்கு யாழ். மேல்நீதிமன்றத்தில் நீதிபதி ஜே ஜி. ஆசீர்வாதம் முன்னிலையில் ஆரம்பமானது.

இவ்வழக்கில் உடுவிலில் 78 ஜனவரி 12ம் திகதி செல்லையா என்பவரின் வீட்டை கொள்ளையடிப்பதற்கு உடைத்ததாகவும் 80,000 ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையடித்ததாகவும் கந்தர் செல்லையாவையும் மனைவி அன்னம்மாவையும் கொலைசெய்ததாகவும், கொலை, கொள்ளையடிக்க சதிபுரிந்ததாகவும் தா. கணேசலிங்கம், சி ஜேரந்திரன், அன்ரன் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

பொன்னையா சண்முகநாதன் சாட்சியமளிக்கையில் மேலும் கூறியதாவது: ''எனது சொடி 17 பவுண் நிறையுள்ள தென்று மாமி அடிக்கடி கூறுவார், அது ஒரு வைரக்கொடி. மாமியின் கொடியைப் பார்த்துத்தான் அதேபோல் என் மனைவிக்கும் கொடிசெய்தேன். ஆனுல் அது நிறை குறைவு.

''இறந்த செல்லையாவும், அன்னம்மாவும்தான் என்னை சிறுவயதுமுதல்வளர்த்தவர்கள் அவர்களைமாமாமாமிஎன்று அழைப்பேன். 68-ம் ஆண்டு திருமணம் செய்தேன். இணுவிலிலுள்ள எனது மனைவி வீட்டில் வசித்து வந்தேன். அதற்குமுன் டச்ரோட்டில் இருந்தேன்.

''சம்பவதினம் காலை 6-30 மணிக்கு வரதராசா வந்து விஷயத்தைச்சொன்னுர். நான் மாமா வீட்டிற்குப் போனேன். அடுத்த வீட்டுப்பெண்ணும், 3 பிள்ளைகளும் நின்ருர்கள். அப்பா பொலிசிற்குப் போய் விட்டதாகச் சொன்னுர்கள்.

''கதவைத்திறந்து மாமா வைக் கண்டேன். உள்ளே போகவில்லை, மாமியின் தலை சேலையால் கட்டப்பட்டிருந்தது அவரின் கைகள் கால்களுக்கிடையில் இருந்தது. உள்ளே போகவேண்டாமென்ருர்கள். பொலிசார் வந்தபின் தான் உள்ளேபோனேன். நான் அவர்களைத் தொட்டுப்பார்க்கவில்லை. ''என் மாமா தோட்டம் செய்துவந்தார். அத்துடன் வீட்டில் அடைவு பிடித்து வந்தார்கள்.

''முதலாம் எதிரியை எனக்குத் தெரியும். அவர் சொந்தக்காரர். 1ம் எதிரியின் தாய், எனது மாமியை, மாமி என்று அழைப்பார். அவர் வீட்டுக்கு வந்து போறவர். 2ம் எதிரியைக் கண்டிருக்கிறேன் வீடு தெரியாது. 3ம் எதிரியைத் தெரியும். 1ம் எதிரியுடன் அவர் வேலைக்கு வாறவர்

நீதிமன்றத்தில் காட்டப்பட்ட தாலிக்கொடியை சாட்சி ''இதுதான் மாமியின் வைரக்கொடி'' என்று அடையாளம் காட்டினுர்.

விசாரணை இன்று காலை தொடர்ந்து நடைபெறும்.

## "கிராமிய மக்களின் சேவகர்கள் நாம்"

(வவுனியா)

கிராமிய மட்ட மக்களே இந்த நாட்டில் பெரியவர்கள். அவர்களுக்குச் சேவைசெய்யும் நாம் அவர்களுடைய சேவகர்கள்'' என்று கூறுகிருர் வவுனியா அரசாங்க அதிபர்.

வவுனியா மாவட்ட விசேட சேவை உத்தியோகஸ்தர்களுடைய தொழிற்சங்கக் கூட்டத்தில் சிறப்புப் பிரதிநிதியாகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே வவுனியா அரச அதிபர் திரு. கே. வி. லோகேஸ்வரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொழிற்சங்கத் தலைவர் திரு. ரி. சர்வானந்தம் தலைமையில் இக்கூட்டம் வவுனியா கூட்டுறவு சபை மண்டபத்தில் நடந்தது.

நெடுங்கேணி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பாலசுந்தரம் விசேட சேவை உத்தியோகஸ்தர்களான திரு. உபாலி, திரு. தர்மதாசா, ஜனாப் றஹீம் ஆகியோரும் உரையாற்றினர். சங்கச்செயலாளர் திரு. ஏ. கிருஷ்ண பிள்ளை நன்றி கூறினுர்.

## மணியந்தோட்டப் பகுதியில்

# சட்டவிரோதமாக

# மண் அள்ளப்படுகிறது!

### குடியேற்ற மக்களை எதிர்நோக்கும் பேராபாயம்

[யாழ்ப்பாணம்]

மண் அள்ளுவது சட்டவிரோதமாக்கப்பட்டிருந்தும் கொழும்புத்துறை மணியந்தோட்டத்திலும், அதைச் சூழவுள்ள பகுதிகளிலும் இரவு வேளைகளில் 'டிராக்டர்'கள் மூலமாக சட்டவிரோதமாக தொடர்ந்து மண் அள்ளப்பட்டு வருவதாக முறையிடப்படுகிறது.

இரவு 10 மணிக்கு ஊரடங்கிய பின்னர் சட்டவிரோதமாக மண் எடுப்பதை ஆரம்பிக்கும் 'டிராக்டர்'கள் காலை 5 மணி வரை இந்தச்சட்டவிரோதத்தொழிலை தினமும் நடத்தி வருவதாகச் சொல்லப்படுகிறது.

டிராக்டர் மூலமாக ஒரு பெட்டி மண் ரூ 200க்கு விலைபோவதால் 'கள்ளமண்' எடுக்கும் டிராக்டர்கள் எதற்கும் தயாரான நிலையில் ஐந்தாறு பேருடன் சென்று இந்த 'நடுநிசி' நாடகத்தில் ஈடுபட்டு வருகின்றனவாம்.

மணியந் தோட்டத்திலும் அதைச்சூழவுள்ள தனியார் காணியிலும் 'டிராக்டர்கள்' இரவு பூராவும் மண் அள்ளுவதால் மணியன்தோட்ட குடியேற்ற மக்கள் நிம்மதியாக நித்திரை கொள்ளமுடியாததுடன் பெருமழை பெய்தால் வெள்ளம் தேங்கி வழிந்து குடியேற்றப்பகுதியை அழிக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது.

சிறு மழை பெய்தாலே வெள்ள அபாயம் ஏற்பட்டு அகதிகளாக அடிக்கடி வெளியேறும் மணியந்தோட்ட குடியேற்ற மக்கள் தோட்டத்தை சூழவுள்ள பகுதிகளும் இச் சட்டவிரோத நடவடிக்கையால் குடைந்து குளமாக்கப்பட்டால் இனி அங்கு குடியிருக்க முடியாத நிலையே ஏற்படுமென்று அஞ்சுகின்றனர்.

இது சம்பந்தமாக மேற்படி குடியேற்ற மக்கள் யாழ் பொலிஸ் அத்தியட்சகர் அரசாங்க அதிபர், உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு மகஜர் சமர்ப்பித்திருப்பதாகவும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரியிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## காட்டு யானை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

யானை எதிர்ப்பட்டு தாக்கியது

யானைகள் கிளிநொச்சித் தொகுதியில் பல இடங்களிலும் பெரும் அனர்த்தங்களை விளைவித்து வருகிறது. யானைகள் கூட்டம் கூட்டமாகவே கிராமங்களை வலம்வருகிறது இரவுபகலென்று பாராது எந்நேரமும் கிராமப்புறங்களில் யானைகள் கூட்டத்தைக்காணக் கூடியதாக இருக்கிறது!

யானைகளின் கோரத்தாக்குதலில் இருந்து மக்களை காப்பாற்றுமாறு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரிடம் பொது ஸ்தாபனங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளன.

## மரண அறிவித்தல்

### அரியகுட்டி பாக்கியம்

பாக்கியம் காலமாகிவிட்டார் இவர் அரியகுட்டியின் அன்புமனைவியும், பூமணி, சிவமணி, கமுகாசலம் (அபுதாபி), கங்காதரன், மஞ்சுன்மணி, இந்திராணி, சிறிதரன், தணிகாசலம் (சவூதி), சந்திரகுமார் (சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை) ஆகியோரின் அருமைத்தாயாரும், அந்தோனிப்பிள்ளை (அரச மரக் கூட்டுத்தாபனம், கொலன்னாவை), பேபீஸ் (C. W. E. யாழ்ப்பாணம்), இந்திராதேவி, சிறிசக்தி, மகேந்திரன், இந்திரன் (சவூதி) ஆகியோரின் அன்புமாமியுமாவார். அன்னாரின் பூதவுடல் 20-3-84 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4-00மணியளவில் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். உறவினர்களும் நண்பர்களும் இதை ஏற்றுக்கொள்ளவும்.

205/1, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

1491

தகவல்:

யாழூர்துரை

## சத்வாலுக்கு அவசர---

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தினுல் அழைக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் திரு. சத்வால் இந்திய வெளிவிவகார அமைச்சர் திரு. பி. வி. நரசிம்மராவ், இந்தியப் பிரதமரின் சிறப்புத்தூதர் திரு. ஜி. பார்த்தசாரதி, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் திரு. எம். கே. ராஜ்கோத்ரா ஆகியோரைச்சந்தித்து நீண்ட நேரம் உரையாடினுர்.

இச்சந்திப்பின்போது, இலங்கையில் இப்பொழுது நடைபெறும் சர்வகட்சி மாநாட்டின் நடவடிக்கைகள் குறித்தே ஆராயப்பட்டதாக, நம்பகமான வட்டாரங்கள் தெரிவித்தன.

சர்வகட்சி மகாநாட்டின் முன்னேற்றம் குறித்து இந்தியா ஓரளவு கவலை கொண்டிருப்பதாகவும், மாநாட்டில் தீர்க்கமான முடிவுகள் எதுவுமே இதுவரை மேற்கொள்ளாதது இந்தியாவுக்குச் கவலையை அளித்திருப்பதாகவும் மேற்படி சந்திப்பை உதாரணம் காட்டி வெளியிடப்பட்ட சில ஏஜன்சி செய்திகள் தெரிவித்தன.

திரு. சத்வாலும் அமைச்சர் திரு நரசிம்மராவும் இவ்வாரத்தில் பிரதமர் திருமதி இந்திரா காந்தியைச் சந்திப்பார்கள்.

## இடம்பெயர்ந்த மாணவர் விபத்தில் மரணமானுர்

(இரா. உதயகுமார)

வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்துவந்து மட்டக்களப்பில் கல்விபயின்று வந்த மாணவர் ஒருவர் விபத்தில் சிக்கிமரணமானுர்!

அப்புத்தளையைச்சேர்ந்த த. ரட்ணகுமார் என்ற 19 வயது மாணவரே இவ்வாறு காலமானவராவார்.

மரண விசாரணை அதிகாரி திரு. லோகநாதன் விசாரணையின்பின் விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். ரட்ணகுமாரின் மரணச்சடங்குகள் அப்புத்தளையில் இன்று நடைபெறுகின்றது.

## மூன்று கிரகங்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

(யூரேனஸ்) சந்திரனுல் மறைக்கப்படுகின்றன, இது அபூர்வத்திலும் மிக அபூர்வமானநிகழ்ச்சியாகும்'' என்று யாழ். வானியற் கழகம் நேற்று வெளியிட்டுள்ள குறிப்பொன்றில் தெரிவித்துள்ளது. இக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

''இன்றிரவு 11 30 மணியளவில் விசாகம் முதலாம் பாதத்தில் சந்திரனுல் சனி மறைக்கப்படும், இன்று 9-18 மணியளவில் சந்திரன் உதயமாவதால் இக்காட்சியைக் கீழ்வானத்தில் பார்க்கமுடியும். சந்திரனின வடகீழ் பாகத்தில் சனி மறைந்து வடமேற்பாகத்தில் வெளிப்படுவதை அவதானிக்கலாம்.

''விடியற்காலை 5-30 மணியளவில் பார்க்கும்பொழுது உச்சிக்குச் சிறிது தென்மேற்கில் சந்திரனையும், அதற்கு மேற்கே 4 பாகையில் முன் மறைக்கப்பட்ட சனியையும், சந்திரனுக்குக் கிழக்கே ஏழு பாகையில் நாளை மறைவிருக்கும் செவ்வாயையும் காணலாம்.

''நாளை புதன்கிழமை முன்னிரவு 6 30 மணியளவில் அனுஷம் முதலாம் பாதத்திற்சந்திரனுல் செவ்வாய் மறைக்கப்படும். அன்று சந்திரன் இரவு 10-08 மணியளவில் உதயமாவதால் இக்காட்சியை நாம் பார்க்கமுடியாது. விடியற்காலை 5-30 மணியளவில் சந்திரனுக்கு மேற்கில் முன்மறைக்கப்பட்ட செவ்வாய் 6 பாகை தூரத்தில் காணப்படும்.

''நாளைமறுதினம் 22-ம்திகதி இரவு 11-30 மணியளவில் கேட்டை முதலாம் பாதத்தில் சந்திரன் இந்திரன் மறைக்கப்படும். அன்று சந்திரன் இரவு 11-00 மணிக்கு உதயமாவதால் அதன்மேல் தொலைநோக்கி மூலம் இதனை அவதானிக்கமுடியும் இந்நிகழ்வுகள் அரசியற் சோதிடர்களுக்குப் பெருவிருந்திசு அமையலாம்.''

## கச்சதீவு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மறுநாள்காலை 7-30 மணிக்கு புனித. அந்தோனியார் திருச்சொரூப சுற்றுப்பிரகாரம் இடம்பெற்றது இதனைத் தொடர்ந்து ஆலய மூப்பர் தலைமையில் சென்ற குழுவினர் நெடுந்தீவு திரும்பினர்.

திருவிழா உற்சவத்தில் கச்சதீவில் மீன்பிடி வாடிகள் அமைந்துள்ள மீனவ இனத்தைச் சேர்ந்த சுமார் 150க்குட்பட்டவர்களும் கலந்து கொண்டு உற்சவத்தைச் சிறப்பித்தனர்.

கச்சதீவு உற்சவம், பாதுகாப்புக் காரணங்களையொட்டி கடந்த வருடமும் இவ்வருடமும் தடைசெய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

## இறக்குமதி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விற்பனவுவரி ஆகியவற்றை குறைக்க அரசு ஆலோசனை செய்து வருவதைத்தொடர்ந்தே இப்பொருட்களின் விலை குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஏ)

## கிளிநொச்சியில்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி, கண்டி வீதியில் உள்ள உதிரவேங்கை வைரவ கோவிலுக்கும் இந்துமகா வித்தியாலயத்திற்கும் இடைப்பட்ட பகுதியில்இரத்தினபுரத்தில் 60 ஏக்கரில் இப்பீடம் அமையப்போவது நிச்சயமாகிவிட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் நேற்றுத்தெரிவித்தார்.

பல்கலைக்கழக விவசாயபீடத்திற்கு ஒதுக்கப்பட்ட காணிகளில் அத்துமீறிக்குடியிருப்போரை அவ்விடத்தில் இருந்து அகற்றி கண்டி வீதியில் தமிழ் மகாவித்தியாலயத்திற்கும் லக்சபான மின்சார நிலையத்திற்கும் இடைப்பட்ட பின் பகுதியில் கால் ஏக்கர் முதல் அரை ஏக்கர் வரை அவர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

விவசாயபீடம் அமையும் காணியில் அத்துமீறி குடியிருப்போர் அக்காணியில் இருந்து வெளியேறுவிட்டால் இவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து வெளியேற்றப் படுவார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சட்ட நடவடிக்கை எடுத்து வெளியேற்றப்படுவோருக்கு மாற்றுகாணிகள் நிச்சயமாக வழங்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

விவசாய பீடம் அமையப்போகும் காணிகளில் சுமார் 100 குடும்பங்கள் உள்ளன.

விவசாயப்பீடம் அமையப்போகும் காணியில் ஏற்கனவே நிலவள, நீர்வளப் பரிசோதனைகள் நடைபெற்று அதற்கு அமையவாகவே இக்காணியைத் தெரிவு செய்து இப்பீடத்திற்கு ஒதுக்கப்பட்டதாகவும், இதில் எக்காரணம் கொண்டும் மாற்றம் செய்யமுடியாது என்றும் தெரிவிக்கப்பட்டது.

பொறியியற்பீடம் அமைக்கப்படுவதுபற்றி பின்னர் முடிவெடுக்கப்படவுள்ளது.

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், கே.கே.எஸ் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984—ம் ஆண்டு மார்ச் மாதம் 20 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 100236/81 .Eelanadu-P. O. Box 49. Telegram: Eelanadu; Telephone: 22389—24126